



அமரர்

# தங்கம்மா கைலாயபிள்ளை

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்நினைவு மலர்

03.03.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்/அனலைதீவைப் பிறப்பிடமாகவும்
கிளி/வட்டக்கச்சி, கனடா Missiauga Toranto
வை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# திருமதி தங்கம்மா கைலாயபிள்ளை

அவர்களின் 31ம் நாள் சிவபதப்
பேறுகுறித்த நினைவு மலர்

**03.03.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்காய்
அன்பும் பண்பும் நிறைந்த பேரொளியாய்
என்றும் எம்மை அரவணைத்தும் நெறிப்படுத்தியும்
எம் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
வழிகாட்டியாய்த் திகழ்ந்து

இன் முகத்துடனும் பாசத்துடனும் எல்லோர்க்கும்
நல்லவராய் மனிதருள் மாணிக்கமாய்
வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகி
விட்ட எமதருமை அன்னைக்கு

என்றும் உங்களை எம் நெஞ்சிலிருத்தி என்றும்
உங்கள் ஆசி வேண்டி எம் கண்ணீர்ப்பூக்களால்
அர்ச்சித்து இம்மலரினை உங்கள் திருவடிகளில்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**



**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

# அன்புத் தெய்வம்

மண்மகிழ
20
07
1935



கண்நெகிழ
01
02
2018

அமரர்

## தங்கம்மா கைலாயபிள்ளை

அவர்களின்

### திதி நிர்ணய வெண்பா

மன்னு ஏவிளம்பி மலர்ந்ததொரு தைத்திங்கள்
துன்னுமமரபக்க பிரதமைத் திதியே-மின்னனையாள்
தங்கம்மா கைலாயபிள்ளை கங்காதரனழக்கே
மையலுடன் போயுற்ற போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்







## விநாயகர் துதி

விநாயகனை வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோகியசுந்தரனே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழியானாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## தேற்றம்

முடிசார்ந்த மன்னரும் முற்றும் உள்ளோரும் முடிவிலொரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும் இந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்
அடி சார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே

(பட்டினத்தார்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திருமதி. தங்கம்மா கைலாயபிள்ளை

## அவர்களின்

## வாழ்வியல் நோக்கு


நீலத் திரைமகள்
நித்தம் தாலாட்டும்
கோலம் கொண்டு
கொற்றவர் போற்றும்
மக்களோடு
வான்புகழ் ஐயனார்
கோவில் வந்து
குவலயம் பணியும்
சீலம் மிகுந்த
செல்வ பதியாம்
அழியாப்புகழ் மிகு
அனலை தீவில்
சுப்பிரமணியம்
தூயவனோடு
நாகம்மாவெனும்
மங்கையர் திலகமும்
தீபம் இலங்க
பூமகள் வதனம்
பொன்னாய் மின்ன
தாரணி வந்த
தங்க மதலை
அன்னை மடியில்
அன்புப் பாலூண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தாதை அணைப்பில்
தமிழமுது துண்டு
மழலை குதலை
வாகாய் மொழிந்து
வளர்பிறை என்ன
வளரும் வேளை
ஆண்டவன் அழைத்த
அன்பின் திலகங்கள்
புண்ணிய சீலன்
பூபாலபிள்ளை
கன்னல் மொழியாள்
யோகம்மா
அறிஞர் ஏறு
ஆறுமுகம்
வண்ண மெல் அணங்கு
வள்ளியம்மையுடன்
செல்வபூமியாம்
கனடா வாழும்
செல்லம்மா வெனும்
சேயிளையா யாழும்
சோதரராகத்
தோன்றி மகிழ
அன்னவரோடு
ஓடி ஆடி
உருண்டு புரண்டு
மண் விளையாடி
வளரும் வேளை
வித்தை விரும்பும்
வேளை வரவே
வித்தியாசாலை
விதந்து போற்ற
சுத்தக் கல்வி
சுகமே கற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறமும் பண்பும்
அழகும் குணமும்
அன்பும் மிக்க
வித்தகி என்று
ஊரார் கண்டு
உவந்து மகிழ
சோதரக்குற்ற
துணைவர்களாக
தேவர் நாடு
சென்றும் புக்க
சுத்த அன்பின்
தோகை நல்லாள்
சற்குணத்தோடு
சண்முகசீலன்
கமலம்மாவெனும்
காரிகையாமும்
கந்தையாவெனும்
கட்டழகோறும்
மாழா அன்போடு
இன் நிலம் வாழும்
கண்ணியவானாம்
கதிரவேலுவும்
வந்தே பொருந்த
அகமிக மகிழ்ந்து
அன்னவரோடு
அன்பு கொண்டாடி
உற்ற பணிகள்
எல்லாம் செய்து
வாழும் காலை
வதுனவப் பருவம்
வந்தே கூட
நேரிய நாடாம்
நெடுந்தீவூரின்
சீரிய குணத்துச்
செல்வனாதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திலிங்கமும்
மங்கை நல்லாள்
நாகாத்தைபிள்ளையும்
செய்தவமதனால்
வையகம் வந்த
ஒத்த குலத்தின்
உரித்துடையோனாம்
மன்மதன் என்னும்
சன் மார்க்க சீலன்
காசினி போற்றும்
கைலாச பிள்ளையை
பெற்றோர், பெரியோர்
அந்தணர் அறவோர்
நிறைந்த அவையில்
மண மகனா
மாலை சூட்டி
வாழும் வகையால்
மண்டலம் போற்றும்
மைத்துனர்களாக
சன்மார்க்க சீலன்
சுபாரத்தின மேலோன்
குணக் குன்றான்
குமாரசாமி
உற்றிடத்துதவும்
சுப்பிரமணியம்
கற்றுணர்கேள்விக்
கதிரவேலு
கோலவதனக்
குணநாயகி
பாசம் மிகுந்த
யோகம்மாவுடன்
வையகம் வாழ்த்தும்
தையல் நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னற் கொடியாள்
பொன்னம்மாவும்
இறைவன் அருளால்
இனிதே கூட
அன்னவரோடு
அன்பு கொண்டாடி
இரவலர்க் கிட்டு
இல்லோர்க் களித்து
பள்ளி கோவில்
பலவும் வளர்த்து
அன்பில் தோய்ந்து
அறம் பலம் செய்து
வாழ் பயனதனால்
வையகம் போற்றும்
மக்களாக
வந்தே பிறந்த
கிளி அன மொழியாள்
கிஸ்ணவேணி
இனிய வதனத்து
இரகுநாதன்
சேவையில் உயர்ந்த
சேது நாதன்
தன் அளி மானாம்
தண் தமிழ் ஆசிரியை
தன லட்சுமி
வண்ணக் கிளியாம்
வசந்தவேணி
கற்பக தருவாம்
கமலநாதன்
நல் அறம் பேணும்
கமல வேணி
இன் தமிழ் வல்ல
இரவந் திர நாதனும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிள்ளைகளாகப்
பிறந்து மகிழ
அன்பாய் வளர்த்து அறவழி காட்டி
ஏற்ற பணிகள்
எல்லாம் செய்து
நல்லோர் என்று
நாடு வாழ்த்த
பல்கலை எல்லாம்
பயில வைத்து
வாழும் வகையால்
மக்களுக்கேற்ற
மருகர்களாக
செந்தமிழ் அரசன்
திருநாவுக்கரசு
ஊரில் இனிய
உமாதேவி
சந்திர வதன்
சரோஜினி தேவி
பண்பின் சிகரம்
பகர் கிராமசேவகர்
பற்குண சிங்கம்
சத்திய சீலன்
சபாரத்தினம்
மூவா மருந்தாம்
சாரதாவோடு
பாச வள்ளல்
ஸ்ரீஸ்கந்தராசா
தர்ம வடிவாம்
சத்திய மீரா
என்னும் மருமக்கள்
இறை அருளதனால்
வந்தே சேர
மனமிக மகிழ்ந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்னவர் போற்ற
அரும் பணி ஆற்ற
தீரா அன்பும்
சோரா மனமும்
கொண்டு வாழ்ந்த
கொள்கை கண்பூசன்
கொஞ்சிப் பேசி
குலவி மகிழ
அன்பிற் குழைத்த
அமுதம் போன்ற
பேர்களாக
கரும்பெனப் பேசும்
கலாஜினி
கற்கண்டான
ரமணன்
தேனெனும் சுபாஜினி
தெவிட்டாத
அனிதா
கனிமொழி
சுகிதா
அருணமணி
தினேஸ்
அன்பு
திருவுடைப்
பிரசாத்
செல்வக்
கஸ்தூரி
அருள்மிகு
சாளினி
அறமணி
சாமினி
ஆனந்தச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்மினி
சத்தியவானாம்
சரவணன்
கற்றவர் ஏற்றும்
கௌசிகா
சாந்தம் மிகுந்த
சங்கரன்
இரத்தினமணியாம்
ரவீனா
கண் விட்டகலாக்
ஹர்சன்
பிரியம் மிகுந்த
பிரதீபன்
வண்ண மலராம்
வைகுந்தன்
எண்ணற்கினிய
கௌதமன்
இன் சொல்லாளன்
துளசி அவனும்
வந்தே பிறந்து
மனது நிறைய
வாழும் காலை
விழுதுகள் மிகுந்த
விருட்சம் என்று
ஊரார் உவப்ப
பூட்ட மக்களாய்
பொன் எனும்
ஹர்ஷினி
புகழ் மிகுசனா
நித்திலம் போற்ற
நேடனுடனே
உத்தமன்
டருனும் சேர்ந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தே பிறக்க
மனமது நிறைந்து
தர்மப் பணிகள்
சகலதும் செய்து
மண்ணியல் வாழ்வு
வகையது கண்டு
எல்லைய
வகையது கண்டு
எல்லையிற் செல்வம்
எண்ணிலாச் சுற்றம்
மண்ணில் சிறந்த
மாமனை வளாகம்
எல்லாம் துறந்து
தில்லைநாதன்
திருவடி ஒன்றே
அரும் துணை என்ற
அறிவு மேலோங்க
உற்ற துணைவனாம்
கைலாயபிள்ளையாய்
காண்பூபன் தானும்
மண்ணில் விழுந்து
மயங்கிச் சோர
பெற்ற பிள்ளைகள்
பித்தர்களாகப்
பேரர்கள் பூட்டர்கள்
பேதலித் தேங்க
ஊரும் சுற்றமும்
உழன்று கலங்க
நோய் நொடி துன்பம்
யாதும் இன்றி
ஓடிப் போனாள்
தங்கம்மாவாம்
தையல் நல்லாளே

பாவனையேயன்றி அவையே இறைவனாக மாட்டா. அதன் மூலம் இறைவனை உணர்ந்து அடைய வேண்டுமே தவிர, அதுவே முழுமையானதல்ல என்பதைத்தான் அவர் தனது பாடல் வரிகள் மூலம் சுட்டுகிறார்.

அதுபோல

***கோவிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?***

***கோவிலும் குளங்களும் கும்பிடும் குளாமரே!***

— என்ற வரிகளைச் சொல்வார்கள்.

ஆனால் அதன் தொடர்ச்சியான

***கோவிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே!***


***ஆவதும் அழிவதும் இல்லைஇல்லை இல்லையே.***

என்ற வரிகளை வழக்கம் போல மறந்து விடுவார்கள். இந்தப் பாடலுக்கு விளக்கமே தேவையில்லை. மனதுக்குள்ளேயே அனைத்தும் உள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த 2017 யூலை குடும்பத்தாருடன்
## நெடுந்தீவு, அனலைதீவு,நயினாதீவு சென்ற போது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் பிரலாபம்

என்னைப் பிரியா இதயம் நீ எங்குற்றாய்
உன்னைப் பிரிந்து உள்ளந் தான் வாழ்ந்திடுமோ
கன்னல் மொழிமானே கற்கண்டே நித்திலமே
மின்னாமல் , முழங்காமல் எங்குள்ளாய் செந்தேனே

# மக்கள் பிரலாபம்

சொந்த ஊர் சென்று சுகமாய் வருவீரென்று
நம்பி அனுப்பி வைத்தோம் அம்மாவே
வந்தவூர் வேண்டாமென்றோ
வழியதனில் வாடிவிட்ட மரைானீர்?

அன்னை எனச் சொல்வோமோ அம்பாள் என்றுரைப்போமோ
பொன்னாய் எமைப் போற்றி பூவாய் வளர்த்தவளே
என்ன கொடுமை அம்மா எங்குற்றாய்! எங்குற்றாய் !
முன்னை வினைப் பயன்தான் மூண்டதுவோ இவ்வணமே !

# மருமக்கள் பிரலாபம்

தாயுமாய் தந்தையுமாய் தாங்கி நின்ற மாமி அம்மா
நீ போன மாயம் நினைக்கவே கூடு தில்லை
பாயிற் கிடவாமல் பரிந்துணவு ஊட்டாமல்
பாதிவழியில் எம்மை விட்டுச் சொல்லாமல் சென்றதெங்கே?

# பேரமக்கள் பிரலாபம்

அம்மா இல்லாக் குறையை அருகிருந்து தீர்த்தீரே
அன்புப் பெரியம்மாவே எப்பிறப்பில் காண்போம் உம்மை
கனவோ நனவோ குஞ்சியம்மா கண்மூடி முழிக்கு முன்பே
காற்றாய்ப் பறந்தீரே எண்ணமுடியவில்லை
ஏங்குகிறோம் உமைப்பிரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரி பிரலாபம்

எல்லாரும் சென்று இறைவன் அடியே
சொல்லுற் கொரு சோதரியாய் சுகமாய் இருந்தாயே
அல்லுற் கடலின் எனை அடியோடு தள்ளி விட்டு
மெல்லியளே சென்றவிடம் விளம்பாயோ என்னுயிரே

## பேரர்கள் பூட்டர்கள் பிரலாபம்

சின்னக் கதைகள் சொல்லி தேனமுதூட்டி வைப்பாய்
வண்ண மலர்கள் என்று வாடாமல் காத்திருப்பாய்
என்ன மனசு வைத்து எமைப் பிரிந்து சென்றாயோ
உன்னையே எப்போதும் தேயாமற் தேடுகிறோம்.

## சுற்றத்தார் பிரலாபம்

சுற்றம் அறிந்து அரிய உதவி செய்வாய்
சுற்றமெலாம் பேணி சுகம் பெறவே செய்திடுவாய்
கற்றதோ உம்மிடத்தில் கனிமொழியே எண்ணிலவே
ஏற்று தெமை மறந்து எங்கிருக்கிறாய் தேனமுதே

## ஊரார் பிரலாபம்

யாருக்கும் துன்பமென்றால் அங்கு நீ நின்றிடுவாய்
பேருக்கொருவரை நாம் பார்த்ததில்லை உன் போலே
சீரும் திருவுமுடைச் செல்வமே எம்மை விட்டு
ஆருக்கும் சொல்லாமல் நீ போன மாயமென்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுவொழிந்தாற்
சொன்ன விசாரம் தொலையா விசாரம் நற்றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம் இப்பாவி நெஞ்சுக்
கென்னவிசாரம் வைத்தாயிறைவா கச்சியேகம்பனே

கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையுந் நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே

கட்டியணைத்திடும் பெண்டீரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழங்கியழுவார் மயானங்குறுகியப்பால்
எட்டியடிவைப்பாரோ விறைவா கச்சியேகம்பனே

பிறக்கும் பொழுது கொண்டுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலமருக்கு என்சொல்லுவேன் கச்சியேகம்பனே

ஊருஞ்சதமல்வுற்றார் சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல் பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீரும்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள் சதங்கச்சியேகம்பனே

பிறந்து மண்மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பதை
மறந்த சிற்றின்பத்தின் மேன்மையலாகி புன்மாதருக்கு
புறந்துழன்றே தடுமாறிப் பொன்றேடியப் பாலையர்க்கீந்
திறந்திடவோ பணித்தாயிறைவா கச்சியேகம்பனே

ஐயுற் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றியூர் உடையீர் திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பெற்ற தாயாரும் என்னைப் மபிணமென்றிகழ்ந்து விட்டார்
பொன் பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பி விட்டார்
கொன் பெற்ற மைந்தரும் பின் வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற்றொழிய லொருபற்றுமில்லையுடையவனே

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழ்த்திடுநாள்
நீயொரு நானொரெனப் பகர்வாராந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வாரே கொண்டநோயுமொரு
பாயாரு நீயுமல்லாமற் பின்னையேது நட்பாமுடலே

அன்னையெத்தனை யெத்தனை அன்னையோ
அப்பனெத்தனை யெத்தனையப்பனோ
பின்னையெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளையெத்தனை யெத்தனை பிள்ளையோ

முன்னையெத்தனை யெத்தனை செனமமோ
மூடனாயடி யேனுமறிந்திலேன்
இன்னமெத்தனை யெத்தனை செனமமோ
என் செய்வேன் கச்சியேகம்பநாதனே

ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவி என்ற நாமற் படையாதே - மேவியசீர்
வித்தாரமும் கடம்பும் வேண்டா டமடநெஞ்சே
செத்தாரைப்போலவே திரி

வாளான் மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல்லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லேனல்லன்
நானினிச்சென்று ஆளாவ தெப்படி யோதிருக்காளத்தி யப்பருக்கே.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நிலைப்பதல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்து நாம் உய்யவேண்டுமென்றே அறிவாரில்லையே.

பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே அதுகாண் நல் மருந்துனக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரையும்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞானும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குபாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்ட முப்பரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவா
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலையந்தனில்
திருவடி வைத்துத்திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந் தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே
உவட்டாவுபதேம் புகட்டியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவினையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந்தந் தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத்துஅங்குச் நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடையிங்கலையின் எழுத்தறிவித்து
கடையில் இழு முனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூனின்
நான் றெழுபாம்பின் நாவிலுணர்த்தி
குண்டலியதனிற் கூடியஅசவை
விண்டெழ மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருவெளியிரண்டும் கொன்றிட மென்ன
அருள்தரும் அனைத்து அழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தமழித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்செ
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணு விற்கணு வாய் அப்பாலுக்கப்பாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாய்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயகர் விரைகழல சரணே

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விழங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொழியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேவன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்.!

முத்தன்ன வெண் நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியர் பாடாரோ நஞ்சிவனை!
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ!
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ!
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்!
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப்முப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணாமலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிநீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக்கோதாட்டும்
சீலரும் பாடிச் சிவனே சிவனேயென்
ஒல மிடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றதும் நாணாமே
போன திசைபகராய் இன்னமும் புலர்ந்தின்றோ!
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தம்கோனைப் பாடலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே யிவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றேவாய் திறப்பாய்
தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னுந்துயிலுதியோ!
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.!

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்.!

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசேதொழும் பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே உமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந்துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.!

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து கிடைத்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல் போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்!
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்பாவார் கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகமும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீராடேலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்பைம் போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலர்கமுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போற்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்குப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.!

காதார் குழையாடாப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளாமாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத்தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.!

ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள் விண்யோரைத்தான்பணியாள்
பேரரையாற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவம் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம் புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைக்கடலை சுருக்கியெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னைப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக்கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கன் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மனித்தொவீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப்பிறங் கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோர் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசேயெமக் கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோர் எம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாந் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குத் தோற்றாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாதபுண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கணவரின் 90 வது பிறந்த தின
நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 12 | இளைஞர் தினம் |
| பெப்ரவரி | 14 | உலககாதலர் தினம் |
| | 28 | தேசிய அறிவியல் தினம் |
| மார்ச் | 08 | சர்வதேச மகளிர் தினம் |
| | 11. | பொதுநலவாய தினம் |
| | 13 | உலக சிக்கன தினம் |
| | 15 | உலக ஊனமுற்றோர் தினம் |
| | 22 | சர்வதேச குடிநீர் தினம் |
| | 27 | சர்வதேச நாடக தினம் |
| ஏப்ரல் | 01 | உலக முட்டாள் தினம் |
| | 07 | சர்வதேச சுகாதார தினம் |
| | 12 | சர்வதேச தாதிகள் தினம் |
| | 12 | உலக விண்வெளி தினம் |
| | 22 | சர்வதேச பூமிப்பாதுகாப்பு தினம் |
| | 23 | சர்வதேச புத்தக தினம் |
| மே | 01 | உலக தொழிலாளர் தினம் |
| | 08 | சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை தினம் |
| | 31 | புகைத்தல் மறுப்பு தினம் |
| யூன் | 05 | சர்வதேச சுற்றுச் சூழல் தினம் |
| | 26 | போதைப் பொருள் தினம் |
| யூலை | 11 | சர்வதேச சனத் தொகை தினம் |
| | 28 | அகதிகள் தினம் |
| ஆகஸ்ட் | 29 | சர்வதேச விளையாட்டு தினம் |
| செப்ரெம்பர் | 08 | எழுத்தறிவு தினம் |
| | 16 | ஓசோன் தினம் |
| ஒக்டோபர் | 01 | சிறுவர் தினம் |
| | 05 | சிறுமியர் தினம் |
| | 06 | சர்வதேச ஆசிரியர் தினம் |
| | 17 | வறுமை ஒழிப்பு தினம் |
| | 24 | ஐக்கிய நாடுகள் தினம் |
| | 30 | சர்வதேச சேமிப்பு தினம் |
| நவம்பர் | 21 | சர்வதேச கடற்றொழில் தினம் |
| டிசம்பர் | 01 | உலக எயிட்ஸ் தினம் |
| | 10 | மனித உரிமைகள் தினம் |
| | 13 | சிறுவர் ஒலிபரப்பு தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுகளின் சிறப்புப் பெயர்கள், தேசிய பறவைகள், சின்னங்கள், விளையாட்டுக்கள்.

நாடுகள் தொடர்பாக அறிந்திருக்க வேண்டிய தேசிய பறவைகள், சின்னாங்கள் விளையாட்டுக்கள் தொடர்பான விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. சூரியன் மறையும் நாடு | - | இங்கிலாந்து |
| 2.காகிதவீடு சூரியன் உதிக்கும் நாடு | - | ஜப்பான் |
| 3.நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு | - | நோர்வே |
| 4. தெற்கேயுள்ள பிரித்தானியா | - | நியூசிலாந்து |
| 5.அதிகாலை அமைதி நாடு | - | கொரியா |
| 6.கண்ணீர் வாசல் | - | பாபெல் மண்டெப் |
| 7.இந்தியாவின் வாசல் | - | மும்பாய் துறைமுகம் |
| 8.சீனாவின் வாசல் | - | ஹொயாங்கோ நதி |
| 9.நைல் நதியின் கொடை | - | எகிப்து |
| 10.ஆயிரம் வாவிகள் நாடு | - | பின்லாந்து |
| 11.உலகின் கூரை | - | பமீர் |
| 12.உலக சர்க்கரை கிண்ணம் | - | கியூபா |
| 13.ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சலாந்து |
| 14.ஐரோப்பாவின் காப்பகம் | - | பெல்ஜியம் |
| 15.ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |
| 16.ஐரோப்பாவின் கோழிக்கூடு | - | நெதர்லாந்து |
| 17.புனித நாடு | - | பலஸ்தீனம் |
| 18.தங்கப் போர்வை நாடு | - | அவுஸ்திரேலியா |
| 19.மரகதத்தீவு | - | அயர்லாந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்குச் சில

- மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும், வசதிகளும் அல்ல.
- எந்தக் காரியமாக இருந்தாலும் சரி ஆரம்பத்தில் கஸ்டம், நடுவில் எளிது, முடிவில் இன்பம்.
- கோபம் வாயைத் திறக்கும், கண்களை மூடிவிடும்.
- அதிஸ்ரக்காரன் வீட்டில் சேவல் கூட முட்டையிடும்.
- மாறுதல் கண்டவுடன் மாறும் அன்பு அன்பாகாது.
- நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது.
- எவ்விதம் இறந்தான் என்பது கேள்வியன்று, எவ்விதம் வாழ்ந்தான் என்பதே கேள்வி.
- வீழ்வது வெட்கமல்ல, வீழ்ந்து கிடப்பது வெட்கரமானது.
- கவலைப்படாதீர்கள், கவலையினால் எந்த ஒரு நன்மையும் கிடையாது.
- என்றென்றும் கடவுளையே திடமாக நம்புங்கள்.
- இறந்த காலத்தைப் பற்றிப் புலம்பாதே, எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தி
- விடியலைக் காண வேண்டுமென்றால் வாழ்க்கையோடு போராடு
- புதுமை செய் அல்லது புரட்சி செய்.
- வெற்றி நிச்சயம் அதனால் நாளை நமதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிறந்த நாட்டை பெற்ற தாய் போல் நேசியுங்கள்.
- ஏழைகளுக்கு உதவுங்கள் ஏற்றம் பெறுங்கள்.
- தனது பணிகளை தானே செய்து கொள்ளுங்கள்.
- அன்புக்கும், அறிவுக்கும் எல்லையே இல்லை.
- முடிந்தாலும், முடியாவிட்டாலும் உதவ மாட்டேன் என்று சொல்லாதீர்கள்.
- நீ யாரை ஏமாற்றினாலும் இறுதியில் ஏமாற்றம் அடைவது நீதான்.
- நம்பிக்கை ஒன்றே மனிதனை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லும்
- வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம் ஆனால், நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.
- போர் என்பது யார் வீரன் என்பதைத் தீர்மானிப்பது இல்லை. யார் மிஞ்சியிருப்பது என்பதைத் தீர்மானிப்பது ஆகும்.



சிந்தனைச் செல்வர் சித்தர் சிவ வாக்கியரின் சில பாடல் வரிகளைக் கொண்டு அவர் நாத்திகர் என்ற கருத்து பரவலாகச் சிலரால் கூறப்படுகிறது. குறிப்பாக,

***நட்டகல்லைத் தெய்வம் என்று நாலுபுட்பம் சாத்தியே***

***சுத்திவந்து முணுமுணுவென்று சொல்லுமந்திரம் ஏதடா***

***நட்டகல்லும் பேசுமோ நாதன்உள் இருக்கையில்...***

– என்ற வரிகளைச் சுட்டுகிறார்கள். வசதியாக பாடலின் இறுதி வரியான " ***சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ*** " என்பதை எளிதில் மறந்து விடுகிறார்கள்.

சிந்தனைச் செல்வர் சித்தர் சிவ வாக்கியரின் சில பாடல் வரிகளைக் கொண்டு அவர் நாத்திகர் என்ற கருத்து பரவலாகச் சிலரால் கூறப்படுகிறது. குறிப்பாக,

***நட்டகல்லைத் தெய்வம் என்று நாலுபுட்பம் சாத்தியே***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது தான் வாழ்க்கை

## பட்டினத்தார்

மாத்தானவத்தையும் மாயாபுரியின் மயக்கத்தையும் நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ - நித்தனன்பு கொண்டு வேர்த்தாற் குளித்தும் பசித்தாற் புசித்து விழிதுயின்று பார்த்தாலுவகத் தவர் போலிருப்பார் பற்றற்றவரே.

கொப்பறாகாயக்காய ஓட்டை விட்டு கழன்று விடும், ஓடும் புளியம் பழமும் போல் உலகில் வாழ வேண்டும். அரிசிக்கும் பூமியுண்டு, பூவுக்கும் இதழுண்டு எவருக்கும் ஆதாரத்துக்கு ஒரு பொருள் வேண்டும்.

பூரணமான நன்மையுள்ளதாயின் இப்பிறப்பேயில்லை . சந்திரன் தன் கறையிருளை நீக்க முயவில்லை உலகம் முழுவதற்கும் வெளிச்சம் கொடுத்து இருளையகற்றுகின்றது அதுபோல உலகை சேவையில் ஈடுபடுத்தல் நன்று.

உலகில் செத்தாரைப் போல வாழ வேண்டும். உழைத்து பற்றற்றுச் சீவித்துக் கொண்டு வேண்டியதை வேண்டியவர்களுக்குப் பொருளுதவி செய்து கொண்டு வாழுதல் நன்று.

மீனவன் கடலில் தூண்டில் போடப்பட்ட வகையாக இருக்கின்றோம். காலம் வரும் போது கவ்வுவதற்கு கொஞ்சம் விட்டுக் கொடுத்து இழுத்து விடுவோம். இப்போது கடவுள் இருக்கிறார் என்பது வெளிப்படை ஆனால் அவர் எங்கிருக்கிறார். யான் எங்குமுள்ளேன் எனினும் இப்படி ஒரு கொட்டிலில் இவ்வுடலை வைத்திருக்க வேண்டியதே பேசாதிருந்தால் அவரை அறியலாம். துன்பம், நோய், யாவும் நன்மைக்கே வருகின்றன. வியர்வை வெளிவர வேண்டும் இல்லாவிடில் வருத்தம் வரும்.

மற்றவர்கள் பறக்கிறார்கள் என்று பறக்க நினைக்க வேண்டாம் வேலை செய்து எல்லோருடனும் அன்பாகப் பழக வேண்டும். இருந்து பார்த்தால் எல்லாந் தெரியும்.

அன்பே கடவுள், சத்தியமே கடவுள், கடவுளே உணர்தல் வேண்டும் கண்ணாற் காணுவதல்ல எல்லாம் எங்கும் கடவுள்.

வெள்ளம் பாயும் போது சில தடைகளை எடுத்து விட்டால் நன்றாகப் பாயும் அதற்காகவே குறிபார்த்து செய்யாமைக்கு சில வேளைகளில் ஏச்சு விழும்.

பணம் வரும் போகும் அதைப்பற்றி வருந்த வேண்டியதில்லை கண்ணால் காணப்படுவதெல்லாம் நிலையற்றதென கண்டு கலக்கமற்றிரு.

கடவுளைப் பின்பக்கத்தாலும் தொழலாம் உண்மைப் படிப்பைப்படி எப்போதும் மாணவனாக இரு. அது தான் மிக கஷ்ரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட

வீடும் செல்வமும் தந்தையின் பரிசு.

புத்தியுள்ள மனைவி கடவுளின் பரிசு.

கலைகளில் ஈடுபடுபவன் கவலைகளை மறக்கின்றான்.

நாவிற்கு எலும்புகள் கிடையாது ஆனால் அது பலருடைய எலும்புகளை நொறுக்கின்றது.

உறையினுள் மறைந்திருக்கும் கூரிய வாள் போன்று பெண்கள் உள்ளத்தில் தைரியமும், ஆற்றலும் ஒளிந்துள்ளன.

பணம் தேடுவது ஒரு சாதனை தான் அதைவிட பெரிய சாதனை தேடிய பணத்தைக் காப்பாற்றுவது.

தான் அறியாமல் செய்த தவறை அறிந்து திருந்துபவனே மனிதன்.

நல்ல நண்பர்களை தேடும் முன் நல்ல நூல்களை தேடிக் கொள்வது நல்லது.

முதலில் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ளுங்கள் பிறகு கட்டளையிடும் பதவி தானாக வரும்.

துன்பத்துள் வாழ்ந்து துடிப்போர்க்கு உதவுகின்ற பண்பொன்றே தெய்வப்பணி.

ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப் பெரிய பணக்காரன்.

## வாழ்க்கையில் முக்கியமானவை மூன்று

| | | |
|---|---|---|
| மதிக்க வேண்டியவை | மூன்று | முதுமையானோர், மார்க்க,சட்டம் |
| போற்ற வேண்டியவை | மூன்று | அறிவு, அழகு, பண்பு |
| பேணி வளர்க்க வேண்டியவை | மூன்று | திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி |
| தவிர்க்க வேண்டியவை | மூன்று | புகைத்தல்,மதுஅருந்துதல், சூதாட்டம் |
| அடக்க வேண்டியவை | மூன்று | நா, சோதனை, கோபம் |
| கட்டாயம் கவனிக்க வேண்டியவை | மூன்று | பேச்சு, நடைமுறை, செயல்கள் |
| ஆதரிக்க வேண்டியவை | மூன்று | வாக்குறுதி, நட்பு, அன்பு |
| ஒழிக்க வேண்டியவை | மூன்று | திருட்டு,சோம்பல்,பொய் |
| விரும்ப வேண்டியவை | மூன்று | கருணை, நற்குணம்,மனஅமைதி |
| வெறுக்க வேண்டியவை | மூன்று | பெருமை,அநீதி, வாக்கு மீறல் |
| தப்பித்துக் கொள்ள வேண்டியவை | மூன்று | தீயஎண்ணம்,பொறாமை,பிடிவாதம் |
| அஞ்ச வேண்டியவை | மூன்று | களவு, கோள், பொய் |
| எதிர்கொள்ள வேண்டியவை | மூன்று | கவலை, பயம், மரணம் |
| போரிட வேண்டியவை | மூன்று | தேசம், கண்ணியம், நட்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவத் கீதை சொல்லும் வாழ்க்கை

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சவால் | அதனை சந்தியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பரிசு | அதனை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் | அதனை மேற்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | அதனை கடந்து வாருங்கள் |
| வாழ்க்கை ஒரு துயரம் | அதனை தாங்கிக்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு கடமை | அதனை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | அதனை விளையாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு வினோதம் | அதனை கண்டறியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பாடல் | அதனை பாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | அதனை முடித்து விடுங்கள் |
| வாழ்க்கை ஒரு உறுதிமொழி | அதனை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு காதல் | அதனை அனுபவியுங்கள் |
| வாழ்க்கை ஒரு அழகு | அதனை ஆராதியுங்கள் |
| வாழ்க்கை ஒரு உணர்வு | அதனை உணர்ந்து கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | அதனை எதிர்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு குழப்பம் | அதனை விடை காணுங்கள் |
| வாழ்க்கை ஒரு இலக்கு | அதனை எட்டிப்பிடியுங்கள் |

- எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.
- ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினையாதே.
- நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமையுடைவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுகிறாய்.
- சுதந்திரமானவனாக இரு. எவரிடத்தும் எதையும் எதிர்பார்க்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் மொழிகள்

01) அறிவுள்ள மனிதர்களுடன் உரையாடு
அறிவில்லாத மனிதர்களோடு உறவாடு
ஆனால் பண்பில்லாதவனைக் கண்டால் ஒதுங்கிவிடு.

02) ஒரு வினாடியில் நாம் செய்யும் தவறு
வாழ்க்கை முழுவதும் வேதனையைத் தேடித் தருகின்றது.

03) அயலவனை நேசி அதற்காக அவனையும், உன்னையும் பிரித்து வைக்கும் வேலியைப் பிடுங்கி விடாதே

04) ஒருவன் இறந்தபின் அவனுக்கு அன்னமாய, அமுதாய் படைப்பதைவிட அவன் இருக்கும் போது அவனை நன்றாகப் பராமரிப்பதுதான் சிறந்த கடமை

05) துன்பங்களை உன்னிடத்தில் குடி வைக்காதே
அது உன்னை இறுதியாய் அழித்துவிடும்.

06) யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னை நீ திருத்திக் கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டு விடு.

07) ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு இதமளிக்கும் ஒரு நல்ல வார்த்தை மேலானது.

08) உட்பகையை விட வெளிப்படையாகக் கடிந்து கொள்வது நல்லது.

09) தமக்கு நல்லது என்று கருதாததை பிறருக்குச் செய்யாமல இருப்பவரே சான்றோர் ஆவார்.

10) மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டு நீ மட்டும் ஏணியில் ஏற முயற்சிக்காதே.

11) உனது எதிரியை அச்சுறுத்தும் வலுவான ஆயுதங்கள் உன் மௌனமும் பொறுமையும் தான்.

12) பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ
நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றெழுத்தில் வாழ்க்கை

| | |
|---|---|
| உலகில் உள்ள **உயிர்** | மூன்றெழுத்து |
| உயிரை இயக்கும் **சக்தி** | மூன்றெழுத்து |
| சக்தியின் வடிவம் **அன்னை** | மூன்றெழுத்து |
| அன்னை காட்டும் **அன்பு** | மூன்றெழுத்து |
| அன்பை உயர்த்தும் **அறிவு** | மூன்றெழுத்து |
| அறிவு வளர்க்கும் **பள்ளி** | மூன்றெழுத்து |
| பள்ளியிற் கற்கும் **கல்வி** | மூன்றெழுத்து |
| கல்வியால் கிடைக்கும் **பதவி** | மூன்றெழுத்து |
| பதவியைச் சிறப்பிக்கும் **இளமை** | மூன்றெழுத்து |
| இளமை தரும் **மணம்** | மூன்றெழுத்து |
| மணத்தால் இணையும் மனைவி | மூன்றெழுத்து |
| மனைவியால் உறவாகும் **மழலை** | மூன்றெழுத்து |
| மழலைக்குச் செலவாகும் **பணம்** | மூன்றெழுத்து |
| பணத்தினைத் தேடும் **உடல்** | மூன்றெழுத்து |
| உடல் சோரும் **முதுமை** | மூன்றெழுத்து |
| முதுமையின் பின் **முடிவு** | மூன்றெழுத்து |
| முடிவின் பின் தேடப்படும் **பெட்டி** | மூன்றெழுத்து |
| பெட்டியில் அடங்கும் **பிணம்** | மூன்றெழுத்து |
| பிணம் எடுத்துச் செல்லும் **ஊர்தி** | மூன்றெழுத்து |
| ஊர்தி செல்லும் இடம் **சுடலை** | மூன்றெழுத்து |
| சுடலையில் வைக்கும் **கொள்ளி** | மூன்றெழுத்து |
| கொள்ளியில் எரிந்த **அஸ்தி** | மூன்றெழுத்து |
| அஸ்தி கரையும் **கடல்** | மூன்றெழுத்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

தெய்வத் திருவருளால் எங்கள் குடும்பத் தலைவியாய் வாழ்ந்த எண்ணிலாக் கடமைகளால் எல்லோரதும் இதயக்கமலங்களை மலர்த்தி, இறவாப்புகழ்பெற்ற எங்கள் அன்னை எமது குடும்பத் தலைவி திருமதி. தங்கம்மா கைலாயபிள்ளை அவர்கள் கனடாவிலிருந்து இலங்கைக்கு வந்து வீட்டிற்கு வரும் வழியில் புத்தளத்தில் இறைவனடி சேர்ந்த போது உடனிருந்து அவ்விடத்தில் பேருதவி புரிந்த அனைத்து உறவுகளுக்கும் புத்தள வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் செய்தி அறிந்து ஓடி வந்து உதவி புரிந்தோருக்கும், இவ்வுலக வாழ்வை நீத்த செய்தி கேட்டு தாமாகவே முன் வந்து தேவையான உதவிகளை தேவையான நேரங்களில் ஆற்றியும், ஆறுதல் கூறியும் , மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பி வைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவருக்கும், பதாதை வெளியிட்டவர்களுக்கும், அயலவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகளிலும் பங்கு பற்றி ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளில் கலந்து உதவிகள் செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரிற்கும் இம்மலரைச் சிறப்பாக அச்சிட்டு தந்த வேழன் பதிப்பகத்திற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**
**கிளி/வட்டக்கச்சி, கனடா** Missiauga Toranto



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்

(நெடுந்தீவு)

❖ வைத்திலிங்கம் + ❖ நாகாத்தைப்பிள்ளை

❖ சபாரட்ணம்
கைலாயபிள்ளை (கனடா)
❖ குமாரசாமி
❖ சுப்பிரமணியம்
கதிரவேலு (கனடா)
குணநாயகி (கனடா)
யோகம்மா (இலங்கை)
தையல்நாயகி (கனடா)
பொன்னம்மா (இலங்கை)

+

கிருஷ்ணவேணி (கனடா)
+
திருநாவுக்கரசு (கனடா)

ரகுநாதன் (கனடா)
+
உமாதேவி (கனடா)
அனித்தா (கனடா)
சுகிதா (கனடா)

சேதுநாதன் (கனடா)
+
சறோஜினிதேவி
(கனடா)
டினேஷ் (கனடா)
பிரவீன் (கனடா)

தனலட்சுமி
(ஆசிரியர் கிளிநொச்சி)
+
பற்குணசிங்கம்
(இளைப்பாறிய கிராம அலுவலர் கிளிநொச்சி)
பிரசாத் + வித்தியா (கனடா)
கஸ்தூரி + நந்தகுமார் (கனடா)
டருண் (கனடா)

வசந்
சபார

கலாஜினி + நந்தகுமார்
(கனடா)
ஹர்ஷினி (கனடா)
சுலக்சனா (கனடா)

ரமணன் + சுசானா
(கனடா)
நேடன் (கனடா)

சுபாஜினி
(கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருட்சம்

(அனலைதீவு)

❖ சுப்பிரமணியம் + ❖ நாகம்மா

❖ பூபாலபிள்ளை
❖ யோகம்மா
❖ ஆறுமுகம்
செல்லம்மா (கனடா)
**தங்கம்மா** (கனடா)
❖ வள்ளியம்மை

வசந்தவேணி (கனடா) + சபாரத்தினம் (கனடா)
- ஷாலினி (கனடா)
- ஷாமினி (கனடா)
- ஷர்மினி (கனடா)

❖ கமலநாதன் + சாரதா (அமெரிக்கா)
- ரவீனா (அமெரிக்கா)
- ஹர்ஷன் (அமெரிக்கா)
- பிரதீபன் (அமெரிக்கா)

கமலவேணி (கனடா) + ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா)
- கௌஷிகா (கனடா)
- சரவணன் (கனடா)
- சங்கரன் (கனடா)

ரவீந்திரநாதன் (கனடா) + சத்தியமீரா (கனடா)
- வைகுந்தன் (கனடா)
- கௌதமன் (கனடா)
- துளசி (கனடா)

நாச்சி)
னடா)
ர் (கனடா)

❖ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் என்பதே அறிவு



பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

**கவிஞர்-கண்ணதாசன்**

வேலன் பதிப்பகம் 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org